**செய்தி வெளியீடு எண்– 728** **நாள். 4.9.2008**

இந்துசமய அறநிலையத்துறை – சென்னை

**செய்திக் குறிப்பு**

## மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தணிக்கை ஆய்வர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல்

இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக தணிக்கை பிரிவு செயல்பட்டு வருகிறது. இத்தணிக்கைப் பிரிவிற்கு **35** தணிக்கை ஆய்வர்கள் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தணிக்கை ஆய்வர்களுக்கு மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் இன்று **(4.9.2008)** இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்துசமய அறநிலையத்துறை, முதன்மை செயலர்/ஆணையர் திரு த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இணை ஆணையர் (தலைமையிடம்)
முதன்மை செயலர் மற்றும் ஆணையருக்காக.

**********

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9